**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 34/2023**

**வா.சா2. - ஜுலியஸ்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 06.09.2025.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

நான் 1 முதல் 5ம் வகுப்புவரை கோட்டார் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை பள்ளியிலும் பின்பு பத்தாம் வகுப்புவரை வடலிவிளை அரசு பள்ளியிலும் படித்தேன். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் 1ம் வகுப்புக்கு முன்பாக பள்ளிக்கு சென்றேனா என்றால் நியாபகம் இல்லை. எனது ஊர் வைத்தியநாதபுரத்தில் இருந்து கோட்டார் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை பள்ளி சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். எனது ஊர் வைத்தியநாதபுரத்தில் இருந்து வடலிவிளை அரசு பள்ளி சுமார் 1 ½ கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். வா.சா.ஆ.14 எனது தந்தையின் இறப்பு சான்றிதழ் என்றால் சரிதான். வா.சா.ஆ.15 எனது தந்தையின் வாரிசு சான்றிதழ் என்றால் சரிதான். வா.சா.ஆ.14 மற்றும் 15 வாதிக்கு நான் கொடுத்த ஆவணம் என்றால் நான் கொடுக்கவில்லை என் தாயாரிடம் பெற்றிருப்பார்கள். வா.சா.ஆ.14 மற்றும் 15 என் தாயாரிடம் இருந்து எப்போது வாங்கிசென்றார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

வா.சா.ஆ.14 மற்றும் 15 யை வாங்கி சென்ற விபரம் எனது தாயார் என்னிடம் கூறினார் என்றால் சரிதான். எனது தாயாரிடம் எதற்காக வா.சா.ஆ.14 மற்றும் 15 ஐ கொடுத்தார் என கேட்டேனா என்றால் நான் கேட்கவில்லை. எனது மூத்த சகோதரியின் பெயர் சபீனா அவரது வயது 45 என்றால் சரிதான். எனது சகோதரர் பெயர் மகேஷ் என்றால் சரிதான். அவரது வயது 45 அல்லது 46 இருக்கும். எனது சகோதரர் அருள்செல்வம் மற்றும் சகோதரி மஞ்சு என்பவர்கள் காலஞ்சென்று விட்டார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.15 யார்

விண்ணப்பித்து வாங்கியது என்றால் நான் தான் விண்ணப்பித்து வாங்கினேன். வா.சா.ஆ.15 ல் உள்ள விபரங்கள் அனைத்தும் சரிதான் என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ல் எனது தந்தையின் வாரிசாக நேசபாண்டியநாடாச்சி பெயர் இல்லை என்றால் சரிதான். எனது தாயாரின் தந்தையின் பெயர் என்ன என்றால் ஞாபகம் இல்லை. எனது தாயாரின் தாயார் பெயர் என்ன என்றால் ஞாபகம் இல்லை. எனது தாயாரின் ஊர் காமச்சன்பரப்பு என்றால் சரியல்ல புள்ளிவிளை. எனது மூத்த சகோதரி சபீனா எங்கு பிறந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது சகோதரன் மகேஷ் எங்கு பிறந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது சகோதரன் அருள்செல்வன் மற்றும் சகோதரி மஞ்சு எங்கு வைத்து பிறந்தார்கள் என்றால் அது பற்றி தெரியாது.

நான் வெள்ளையன் தோப்பில் என்ன கதவு எண் கொண்டி வீட்டில் பிறந்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் வெள்ளையன் தோப்பில் எந்த தெருவில் பிறந்தேன் என்றால் தெரு பெயர் தெரியாது எனது தந்தை கூறிதான் வெள்ளையன் தோப்பில் பிறந்தேன் என்பது தெரியும். நான் முதல் விசாரணையில் குறிப்பிட்ட விபரம் அனைத்தும் என் தகப்பனார் சொல்லி தான் எனக்கு தெரியும் நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் எத்தனை வருடங்கள் வெள்ளையன் தோப்பில் இருந்ததாக எனது தகப்பனார் கூறினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது வெள்ளையன் தோப்பில் நாராயண சுவாமி கோவிலில் இருக்கும் நிர்வாகிகள் யார் என்பது குறித்து தெரியுமா என்றால் தெரியாது. எனது தகப்பனாரின் தந்தையின் பெயர் ஆறுமுக நாடார். எனது தகப்பனாரின் தாயாரின் பெயர் செல்லம்மை. எனது தகப்பனாரின் தந்தையான எனது தாத்தா, எனது தகப்பனார் மற்றும் எனக்கு பூர்வீகம் வைத்தியநாதபுரம் என்றால் சரிதான்.

வைத்தியநாதபுரத்தில் இருந்து வெள்ளையன் தோப்பு சுமார் 23 கி.மீ தென்கிழக்கு

திசையில் இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நேசபாண்டிய நாடாச்சி என்ன படித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நேசபாண்டிய நாடாச்சிக்கு வேறு பெயர் இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் தங்கம்மை. நேசபாண்டிய நாடாச்சிக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் தெரியாது. நேசபாண்டிய நாடாச்சி எப்போது காலஞ்சென்றார் என்றால் தேதி நியாபகம் இல்லை 2015 ம் வருடம். நேசபாண்டிய நாடாச்சியின் தந்தை பெயர் தெரியுமா என்றால் தெரியாது. நேசபாண்டிய நாடாச்சியின் சித்தப்பா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. நேசபாண்டிய நாடாச்சிக்கு அவரது தந்தையிடம் இருந்து எத்தனை சொத்துக்கள் கிடைத்தது என்பது குறித்து தெரியுமா என்றால் தெரியாது. நேசபாண்டிய நாடாச்சிக்குரிய சொத்துக்கள் எந்தெந்த வில்லேஜில் எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நேசபாண்டிய நாடாச்சி எந்த சொத்தில் யாருடைய சொத்தில் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

வழக்கு பட்டிகை சொத்தின் விபரம் எனக்கு யார் சொல்லி தெரியும் என்றால் எனது தந்தை சொல்லி தெரியும். நேசபாண்டிய நாடாச்சியின் சொத்து குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் கிழக்கு ரோடு எந்த பக்கத்தில இருந்து எந்த பக்கத்தில் முடியும் என்றால் நான் கிழக்கு பக்கத்தில் இருந்து செல்லும் போது வலது பக்கத்தில் கோவில் இருக்கும். வழக்கு பட்டிகை சொத்தின் மேற்கு ரோடு எந்த பக்கத்தில இருந்து எந்த பக்கத்தில் முடியும் என்றால் தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தின் தெற்கு ரோடு எந்த பக்கத்தில இருந்து எந்த பக்கத்தில் முடியும் என்றால் தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தின் பழைய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வெள்ளையன் தோப்பு ஊர் எத்தனை பஞ்சாயத்திற்குள் வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

வெள்ளையன் தோப்பு ஊர் எத்தனை ரெவன்யூ வில்லேஜிக்குள் வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நேசபாண்டிய நாடாச்சி வெள்ளையன் தோப்பு நாராயண சாமிகோவிலுக்கு எழுதிக்கொடுத்த பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி பத்திரம் எழுதிக்கொடுத்த விபரம் எனது தந்தை கூறி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி பத்திரம் என்ன பத்திரம் என்றும் எனது தந்தை கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி பத்திரம் எபதிவு செய்யப்பட்ட பத்திரம் என்று எனது தந்தை கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி பத்திரம் எழுதப்பட்ட ஆண்டு மாதம் தேதி பற்றி எனது தந்தை கூறினாரா என்றால் இல்லை. வழக்கு பட்டிகை சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

வழக்கு பட்டிகை சொத்தில் யார் கரத்தீர்வை செலுத்தி வருகிறார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வெள்ளையன் தோப்பு நாராயண சுவாமிகோவிலுக்கு தற்போது எத்தனை சொத்துக்கள் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கில் எத்தனை பிரதிவாதிகள் என்றால் அது பற்றி தெரியாது. வழக்கின் பிரதிவாதிகள் நேசபாண்டிய நாடாச்சிக்கு என்ன உறவு முறை வேண்டும் என்றால் அது பற்றி தெரியாது. வழக்கின் பிரதிவாதிகள் எனது தந்தைக்கு எதிராக அ.வ.எண். 151/2023 முதன்மை மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது அதில் நான் இன்று சம்மன் பெற்று ஆஜரானேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனது தந்தை எதிருரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் மேற்படி வழக்கில் எனது தந்தை காலஞ்சென்ற பின்பு என்னை வாரிசாக சேர்க்ககோரி மனு தாக்கல் செய்து அதில் இன்று ஆஜராகியுள்ளேன் என்றால் சரிதான்.

நேசபாண்டிய நாடாச்சி எனது தந்தையுடன் எவ்வளவு நாட்கள் வாழ்ந்தார் என்ற

விபரம் தெரியுமா என்றால் சேர்ந்திருந்தார்கள் என்ற விபரம் தெரியும் மற்ற விபரம் எனக்கு தெரியாது. எங்கு சேர்ந்திருந்தார்கள் என்றால் வெள்ளையன் தோப்பில். வெள்ளையன் தோப்பில் அவர்கள் இருந்த வீட்டில் சுற்றியுள்ள நான்கு எல்கை வீடுகள் தெரியுமா என்றால் தெரியாது. நேசபாண்டிய நாடாச்சியுடன் நாங்கள் அனைவரும் சேர்ந்திருந்ததாக காட்டுவதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நேசபாண்டிய நாடாச்சியின் வாரிசாக சேர்க்ககோரி எனது தந்தை RDO விடம் மனு கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி மனுவில் நீதிமன்றம் மூலமாக நேசபாண்டிய நாடாச்சியின் வாரிசுகளை தீர்மானிததுக்கொள்ள வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நேசபாண்டிய நாடாச்சியின் வாரிசுகளை தீர்மானிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தான் அ.வ.எண்.151/2023 என்றால் சரிதான். மேற்படி வழக்கில் வாதிகளுக்கும் நேசபாண்டிய நாடாச்சிக்கும் என்ன உறவு முறை என்று விசாரித்தேனா என்றால் இல்லை. மேற்படி வழக்கின் வழக்குரையை படித்துப் பார்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை.

இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்காக நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வந்தது அதை வாங்கி கொண்டு வாதியிடம் சென்று வழக்கை பற்றி விசாரித்தேனா என்றால் வழக்கறிஞரை பார்த்தேன். வழக்கறிஞர் யார் என்றால் பெயர் தெரியாது. வழக்கறிஞரிடம் வழக்கு பற்றி கேட்டேனா என்றால் கேட்டேன். வாதியின் வழக்கறிஞரிடம் கேட்டேன் என்றால் சரிதான். நேசபாண்டிய நாடாச்சியின் உடன் பிறந்த சகோதரியின் கணவர் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியான பால்நாடார் என்றால் கேள்விப்பட்டிருக்கிறேன். வழக்கின் 2,3,4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் பிள்ளைகள் என்ற விபரம் தெரியுமா என்றால் கேள்விப்பட்டதில்லை. 2,3,4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதி மற்றும் நேசபாண்டிய நாடாச்சியினுடைய உடன் பிறந்த சகோதரி நாடாச்சிதங்கத்தினுடைய

வாரிசுகள் என்றாலும் நேசபாண்டிய நாடாச்சி குழந்தை இல்லாமல் இறந்ததால் அவருடைய தந்தையிடம் இருந்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் மறுபடியும் நேசபாண்டிய நாடாச்சியின் தகப்பனாரின் வாரிசுகளுக்கு தான் வரும் என்ற முறையில் 1ம் பிரதிவாதி பால்நாடாருக்கும் அவரது குழந்தைகளுக்கும் தான் வழக்கு பட்டிகை சொத்து பாத்தியப்பட்டது எனக்கு வழக்குபட்டிகை சொத்தில் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நேசபாண்டிய நாடாச்சிக்கும் எனது தந்தைக்கும் நாகர்கோவில் சார்பதிவாளர் மூலமாக விவாகரத்து ஆன விபரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. எனது தந்தை 10 வகுப்போ அல்லது 12 ம் வகுப்போ படித்துள்ளார் என்றால் சரிதான். எனது தந்தை ஆங்கிலத்தில் தான் கையொப்பம் செய்வார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் எனது தந்தையின் கையொப்பம் என்றால் இப்படி இருக்காது தெளிவாக இருக்கும்.

எனது அப்பாவுக்கும் நேசபாண்டிய நாடாச்சிக்கும் 11.08.1980 ம் வருடம் நாகர்கோவில் சப்ரெஜிஸ்டார் மூலம் சமுதாய பழக்கவழக்கத்தின் அடிப்படையில் விவாகரத்து ஆனது என்றால் சரியல்ல. நாராயண சுவாமி கோவிலில் அருகில் இருக்கும் ஆஞ்சநேயர் கோவிலுக்கு மேற்கூரை எப்போது போடப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நாராயண சுவாமி கோவிலில் அருகில் வேறு என்ன சுவாமிகள் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நாராயண சுவாமி கோவிலில் எப்போது கட்டி பிரதிஷ்டை செய்தார் விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆஞ்சநேயர் கோவிலை எப்போது கட்டி பிரதிஷ்டை செய்தார் விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு பட்டிகை சொத்து நேசபாண்டிய நாடாச்சிக்கு பின்பு நாராயண சுவாமி கோவில் கைவசம் வந்ததாக முதல் விசாரணையில் கூறியுள்ளேன் எப்போது கைவசம் வந்தது என்றால் அது

பற்றி எனக்கு தெரியாது. வழக்கு பட்டிகை சொத்து எப்போதும் நாராயண சுவாமிகோவிலின் கைவசத்திற்கு செல்லவில்லை பிரதிவாதிகள் கைவசத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

நாராயணசுமாமி கோவிலை யார் பராமரித்து வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து சம்மந்தமாக ஏதேனும் பிரச்சனை வந்தால் நான் பார்த்துக்கொள்ள வேண்டும் என எனது தந்தை கூறியுள்ளார் அதற்கான எழுத்து மூல ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நாராயணசுவாமி கோவிலில் வரிதாரர்கள் இல்லை என்றால் சரிதான். எனது பூர்வீகம் வைத்தியநாதபுரம் தான் வெள்ளையன் தோப்பில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது வழக்கின் வாதி என்னை ஆசைக்காட்டி நேசபாண்டிய நாடாச்சிக்கு அனேக சொத்துக்கள் இருப்பதாகவும் மேற்படி சொத்து சம்மந்தமாக சாட்சி சொல்ல வருமாறும் அதன் பின்பு வழக்கு பட்டிகை சொத்தை வாதிகளும் பிறசொத்துக்களை எனக்கும் கிடைப்பதாக ஆசை வார்த்தை கூறி அதன் பெயரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து நேசபாண்டிய நாடாச்சி குழந்தை இல்லாமல் இறந்ததால் மறுபடியும் நேசபாண்டிய நாடாச்சியின் தந்தையின் வாரிசுகளுக்கு உரிமைப்பட்டது நான் இதில் உரிமைகோர எவ்வித அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து குறித்து நாங்கள் எவ்வித ஆவணங்களும் உருவாக்குவதற்கும் எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றக்கொள்ள தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**